**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102128

1. District : மாவட்டம் Ranipet PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 02/23 Date: நாள் 29/8/2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: U/s 7 of PC
(ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்: (Amendment) Act
(iii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 22.08.2023 at about 1100 hrs & 24.08.2023 at 12.30 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29/8/2023 Time நேரம் : 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-III Time நேரம் : 29.08.2023 @ 8.30hrs & 9.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 km North East
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Village Administrative Office Selvamandai Village, Nemili Tk Ranipet District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. J. Dhasarathan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chinnapaiyan @ James
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15/5/75 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி No 67, Bajanai Kovil St., Arumbakkam Village, Nagavedu (Post) Arakkonam Taluk, Ranipet District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sathish, Village Administrative Officer, Selvamandai Village, Nemili Taluk Ranipet District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
As he was engaged in unavoidable agricultural activity, he could not give complaint immediately.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheets enclosed herewith

—

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29.8.23 [signature] 29/8/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29/8/23 @ 11.45 hrs

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை ....................No. எண் ....
Inspector of Police
Vigilance & Anti Corruption
Ranipet.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

பணிந்து அனுப்பப்படுகிறது: இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 29.08.2023 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த புகார்தாரர் திரு.J.தசரதன் (48/2023), த/பெ சின்னபையன் (எ) ஜேம்ஸ், எண்.67, பஜனை கோவில் தெரு, அரும்பாக்கம், நாகவேடு (அஞ்சல்), அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரின் புகார் மனுவை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- விடுநர் J.தசரதன், த/பெ சின்னபையன் (எ) ஜேம்ஸ், எண்.67, பஜனை கோவில் தெரு, அரும்பாக்கம், நாகவேடு (அஞ்சல்), அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் உயர்திரு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம். ஐயா, நான் அரக்கோணம் தாலுக்கா அரும்பாக்கம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக சில்லமந்தை கிராமத்தில் ஏழு ஏக்கர் நிலம் உள்ளது, அதில் நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய உடன் பிறந்த அண்ணன் பெயர் சகாயம். அவருக்கு சிறுநீரக பிரச்சினை மற்றும் நீரிழிவு நோய் உள்ளது. அவருடைய நண்பர் பெயர் ஸ்வரன்ராஜ். என்னுடைய அண்ணன் சகாயம் அவர்கள் அரக்கோணம் மங்கம்மாள்பேட்டையில் வசித்து வரும் ஜெயராமன் த/பெ முனுசாமி என்பவருக்கு சொந்தமான சில்லமந்தை கிராம புஞ்சை எண்.301-ல் உள்ள 2.39 ஏக்கர் நிலத்தில் 69 செண்ட் நிலத்தை கடந்த 28.06.2023 ஆம் தேதியன்று நெமிலி சார் பதிவாளர் அலுவலகத்தில் விற்பனை ஆவண எண்.1568/2023 கிரையம் பெற்றார். அவரது நண்பர் ஸ்வரன்ராஜ் மீதமுள்ள 1.70 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றார். மேற்படி நிலத்தை என்னுடைய அண்ணன் பதிவு செய்த அன்றைய தினமே பட்டா உட்பிரிவிற்காக சம்மந்தப்பட்ட வருவாய்த்துறையின் வெப்சைட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டது. மேற்படி என்னுடைய அண்ணன் சகாயம் அவர்களின் ஆவண எண்.1568/2023-ல் பதிவு செய்யப்பட்ட சொத்தை நான் 20.07.2023 ஆம் தேதி முதல் குத்தகை பெற்றுள்ளேன். அதன்படி மேற்படி நிலத்திற்குண்டான அனைத்து வேலைகளையும் செய்யும்படி என்னுடைய அண்ணன் சகாயம் என்னிடம் சொல்லியுள்ளார். அதனால் நான் குத்தகை பெற்ற நிலத்தின் பட்டா உட்பிரிவிற்காக கிரையமான நாளிலிருந்து சுமார் 10 நாட்கள் கழித்து சில்லமந்தை கிராம நிர்வாக அலுவலகம் சென்று, கிராம நிர்வாக அலுவலர் சதீஷ் என்பவரை பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் மீண்டும் ஆன்லைனில் பதிவு செய்ய தேவையில்லை, ஏற்கனவே பட்டா மாறுதல் செய்வதற்கான விண்ணப்பம் சப்ரிஜிஸ்டர் ஆபிஸிலிருந்து

தன்னுடைய ஆன்லைனிற்கு வந்துவிட்டதாக சொல்லி, கிரைய ஆவணத்தின் ஜெராக்ஸ் வாங்கிக்கொண்டார். பின்னர், அவர் என்னிடம் தான் நிலத்தை களஆய்வு செய்ய எனக்கு போன் செய்துவிட்டு வருவதாக சொன்னார். கடந்த 17.08.2023 ஆம் தேதியன்று மாலை கிராம நிர்வாக அலுவலர் சதீஷ் அவர்கள் சில்லமந்தையில் என்னுடைய குத்தகை நிலத்தை களஆய்வு செய்ய வந்தார். அப்போது அவருடன் எனக்கு அறிமுகமில்லாத ஒரு நபர் வந்தார். கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் ராஜலிங்கம் வந்தனர் நானும், என்னுடைய அண்ணன் சகாயம் அவர்களும் நிலத்தை காண்பித்தபோது இருட்டத்தொடங்கிவிட்டதால், மறுநாள் 18.08.2023 ஆம் தேதி மதியம் வருவதாக சொல்லிவிட்டு போனர். அதேபோல் 18.08.2023 ஆம் தேதி மதியத்திற்கு மேல் கிராம நிர்வாக அலுவலர் சதீஷ் என்னுடைய குத்தகை நிலத்தை களஆய்வு செய்துவிட்டு, திங்கட்கிழமை 21.8.2023 ஆம் தேதி என்னை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு என்னை வரும்படி சொல்லிவிட்டு போனார். 21.08.2023 ஆம் தேதியன்று எனக்கு வேறு சில வேலைகள் இருந்ததால், என்னால் சில்லமந்தை வி.ஏ.ஓ.ஆபீஸிற்கு போக முடியவில்லை. அதனால், 22.8.2023 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு வி.ஏ.ஓ. ஆபிஸிற்கு போய் சதீஷ் அவர்களை பார்த்து என்னுடைய நிலத்தின் உட்பிரிவு சம்மந்தமாக கேட்டபோது, அவர் பணம் ரூ.5,000/- கொடுத்தால் உடனே உட்பிரிவு செய்து, பரிந்துரை செய்து அனுப்புவேன் என்று சொன்னார். அதற்கு நான் மேற்படி நிலம் என்னுடைய அண்ணனுடையது, அவரை கேட்டுத்தான் நான் பணத்தை கொடுக்க வேண்டும், நானும் அவரிடம் கேட்டுவிட்டு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் என்னுடைய அண்ணனை 24.08.2023 ஆம் தேதியன்று வி.ஏ.ஓ. ஆபீஸிற்கு கூட்டிட்டு போய் உட்பிரிவு சம்மந்தமாக கேட்டபோது, வி.ஏ.ஓ. சதீஷ் அவர்கள் ஏற்கனவே என்னிடம் சொன்னதுபோலவே· என்னுடைய அண்ணன் சகாயத்திடமும் ரூ.5,000/- ஐ லஞ்சமாக கேட்டார். அதற்கு என்னுடைய அண்ணன் இப்போது என்னிடம் பணம் இல்லை, பார்த்து செய்யுங்கள் என்று கேட்டபோது, வி.ஏ.ஓ. சதீஷ் அவர்கள் ரூ.4,000/- ஐ கொடுத்தால்தான் வேலை முடியும் கேட்ட பணத்துடன் வாங்க என்று கறாராக சொல்லி எங்களை அனுப்பிவிட்டார். ஆனால், எனக்கும், என்னுடைய அண்ணனுக்கும் வி.ஏ.ஓ. சதீஷ் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/- ஐ கொடுக்க விருப்பமில்லை. என்னுடைய அண்ணனுக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால், என்னை இராணிப்பேட்டை லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்குமாறு சொன்னார். எனக்கு வேலை இருந்ததால் உடனடியாக வர இயலவில்லை. எனவே, உட்பிரிவு செய்து, பட்டா பெயர் மாற்றம் செய்து தர பரிந்துரை செய்து அனுப்ப லஞ்சமாக ரூ.4,000/- ஐ கேட்கும் சில்லமந்தை கிராம நிர்வாக அலுவலர் சதீஷ் அவர்கள் மீது உரிய

நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் 1) என்னுடைய அண்ணன் சகாயம் அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட நெமிலி சார் பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.1568/2023, நாள்:28.06.2023 நகல், 2) இ-சேவை மையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட என்னுடைய அண்ணன் சகாயம் அவர்கள் கிரையம் பெற்ற சில்லமந்தை கிராம சர்வே எண்.301-ல் உள்ள நிலத்தை உட்பிரிவு செய்து, பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுப்பதற்கான ஆன்லைன் விண்ணப்பம் (நகல் எடுத்த தேதி 25.8.2023) மற்றும் 3) நான் குத்தகை பெற்றதற்கான ஆவணத்தின் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கொடுக்கிறேன். இப்படிக்கு, (SD/-XXXXXX) J.தசரதன் 29.8.23.

Received the complaint on 29.08.2023 at 08.30 Hrs., after due verification, Inspr. Tmt.S.Vijayalakshmi is to register a case. Sd/- xxxxxxxxxxx (V.Ganesan) 29/8/2023, DSP/VAC/Ranipet.

Sir, Received the complaint on 29.08.2023 at 08.30 Hrs. after verifying the antecedents of the accused and credibility of the complainant I have registered a case in Ranipet V&AC Cr.No.2/2023 u/s 7 of P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 29.08.2023 at 09.30 hrs. Sd/- xxxxx (S.Vijayalakshmi) 29/8/2023 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and other copies to the officers concerned.

S.Vijayalakshmi
29/8/23

*Inspector of Police*
Vigilance & Anti-Corruption
Ranipet.